# ஆதி கால வரலாறு

பாடம் 1

## ஒரு பூரண உலகம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

**முன்னுரை** ........ 1
**கண்ணோட்டம்** ........ 2
**வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்** ........ 2
நம்பகத்தன்மை ........ 2
வடிவமைப்பு ........ 3
**பின்னணி** ........ 3
கிடைக்கப்பெற்றவை ........ 3
உரையாடல் ........ 4
**நோக்கம்** ........ 6
**இருண்ட குழப்பமான உலகம்** ........ 9
**முழுமையான / சீரான உலகம்** ........ 10
**ஒழுங்குபடுத்தலின் ஆறு நாட்கள்** ........ 10
**உண்மையான அர்த்தம்** ........ 13
**இருண்ட குழப்பமான உலகம்** ........ 13
**முழுமையான / சீரான உலகம்** ........ 16
**ஒழுங்குபடுத்தலின் ஆறு நாட்கள்** ........ 18
எகிப்திலிருந்து விடுதலை ........ 18
கானானை சுதந்தரித்தல் ........ 20
**நவீன பயன்பாடு** ........ 22
**தொடக்கம்** ........ 23
**தொடர்ச்சி** ........ 26
**ராஜ்யத்தின் நிறைவு** ........ 27
**முடிவுரை** ........ 29



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

சில வருடங்களுக்கு முன்பு, கார் ஒட்டிக்கொண்டிருந்த நான், தடம் புரண்டிருந்த ஒரு ரயிலைக் கண்டேன். அது எங்கும் செல்லாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தது. ஒரு ரயில் நியமிக்கப்பட்ட பாதையில் இருந்து தடம் புரண்டால், பெரும் குழப்பத்திற்கு ஏதுவாக அங்கேயே நின்றுகொண்டிருக்கும்.

ஆதியில் தேவன், தமது சிருஷ்டிப்பான மனிதன் பின்பற்றுவதற்காக ஒரு பாதையை அமைத்தார். இந்தப் பாதையானது அவரது சிருஷ்டியை மாபெரும் ஒரு மகிமையான இலக்கிற்கு நேராய் வழி நடத்தியது. ஆனால் தேவன் நியமித்த பாதையைப் பின்பற்ற மனுக்குலம் பலமுறை தவறிவிட்டது. ஒரு பெரிய குழப்பத்திற்கு ஏதுவாக நாம் உலகத்தைத் தடம் புரட்டி விட்டோம்.

இப்பாடத் தொடரில், உலக வரலாற்றின் ஆரம்ப காலத்தில் தேவன் தமது படைப்புக்காக வகுத்த பாதையைப் பற்றி நாம் கற்றுக் கொள்வோம். கிறிஸ்தவத்தில் இதைப் பெரும்பாலும் "சிருஷ்டிப்பின் கட்டளைகள்" என்று அழைக்கிறோம். மேலும் *ஆதி கால வரலாறு* என்று அழைக்கப்படும் ஆதியாகமம் 1 – 11 யை ஆராய்வோம். வேதத்தின் இந்த அதிகாரங்கள் தேவன் விரும்பியபடி மோசேயின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் மக்கள் பின்பற்ற வேண்டியிருந்த அற்புதமான பாதையைக் காண நமக்கு உதவும். அதோடு, இன்றைக்கும் தேவஜனம் பின்பற்றக்கூடிய பாதையை அவை நமக்குக் காட்டும்.

முதல் பாடத்திற்கு "பூரண உலகம்" என தலைப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் தேவன் தம் பார்வைக்கு மிகவும் நலமாய்த் தோன்றியபடி உலகத்தை எவ்வாறு நேர்த்தியாய் வடிவமைத்தார் என்பதை ஆதியாகமம் 1 : 1 – 2 : 3 இல் மோசே கூறுவதை நாம் நோக்கிப் பார்ப்போம்.

நாம் பார்க்கவிருப்பது போல், இந்த பூரண உலகம், மோசேயின் நாட்களில் தேவன் இஸ்ரவேல் மக்களை எதற்கு நேராய் நடத்திச் சென்றார் என்பதை எதிர்பார்த்தது. வரலாறு முழுவதும் தேவன் தம் ஜனங்களை அந்த இலக்கை நோக்கியே நடத்துகிறார். இது ஆரம்பத்தில் காரியங்கள் எப்படி இருந்தது என்பதை மட்டுமன்றி, இப்போது நம் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதையும், நமது ஜீவியத்தின் முடிவில் உலகம் எப்படி இருக்கும் என்பதையும் காட்டுகிறது.

இந்தப் பாடம் நான்கு பகுதிகளாகப் பிரிகிறது: முதலில், ஆதியாகமம் 1 – 11 இன் பழமையான வரலாற்றுக் கண்ணோட்டத்தை நாம் காண்போம். இரண்டாவதாக, ஆதியாகமம் 1 : 1 – 2 : 3 க்கு நம் கவனத்தைத் திருப்பி, அதன் இலக்கிய அமைப்பை முதலில் காண்போம். மூன்றாவதாக, ஆதியாகமத்தின் இந்தப் பகுதியின் உண்மையான அர்த்தத்தை அது கட்டமைக்கப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெளிச்சத்தில் ஆராய்வோம். நான்காவது, இக்காலத்திற்குப் பொருந்தும் இந்தப் பகுதியின் பயன்பாடுகளைப் பார்ப்போம். முதலில், ஆதியாகமம் 1 – 11 இன் பழமையான சரித்திரக் கண்ணோட்டத்துடன் ஆரம்பிப்போம்.

# கண்ணோட்டம்

ஆதியாகமம் 1 – 11 ற்கான நமது அணுகுமுறை முதலில் சற்று விநோதமாகத் தோன்றலாம். எனவே, நமது அடிப்படையான வியூகத்தை நாம் விளக்க வேண்டும். வேதாகமத்தின் இந்தப் பகுதியைப் பற்றிய நமது ஆய்வுக்குக் குறைந்தது மூன்று முக்கிய யோசனைகளாவது வழிகாட்டும்: முதலாவது, *இந்த அதிகாரங்கள் ஆவியானவரால் அருளப்படுதல். இரண்டாவது, இந்த அதிகாரங்களுக்குப் பின்னால் உள்ள இலக்கியப் பின்னணி; மூன்றாவது, இந்த அதிகாரங்கள் எழுதப்பட்ட நோக்கம்* ஆகியவையாகும்*.*

முதலாவதாக, ஆதியாகமம் 1 – 11 உட்பட அனைத்து வேதாகமப் பகுதிகளும் ஆவியானவரால் அருளப்பட்டவை என்பதற்கு நம்மை முற்றிலும் அர்ப்பணித்திருக்கிறோம்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் பற்றிய நமது சுவிசேஷப் புரிதல், ஆதியாகமப் புத்தகத்தின் இந்தப் பகுதியைப் பற்றி இரண்டு மிக முக்கியமான அம்சங்களை நமக்கு நினைவூட்டுகிறது: முதலாவது, அதன் நம்பகத்தன்மை, இரண்டாவது, அதன் உள்நோக்க வடிவமைப்பு ஆகும்.

### நம்பகத்தன்மை

வேதாகமம் தெய்வீகமாக அருளப்பட்டதால் இப்பகுதி முற்றிலும் நம்பகமானது என்பதை நாம் வலுவாக உறுதிப்படுத்துகிறோம். வேதாகமத்தின் இந்தப் பகுதியைப் படிக்கும் போது வெளி வரத் தொடங்கியுள்ள பல வரலாற்றுப் பிரச்சனைகளில் சில இன்னும் முழுவதுமாகத் தீர்க்கப்படவில்லை. ஆனால் நம் நோக்கங்களுக்காக பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதல் என்பது வரலாற்று நம்பகத்தன்மையைக் குறிக்கிறது என்று சொன்னால் போதுமானது. *ஆதியாகமத்தின் இந்தப் பகுதியை வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ள மோசே இதைத் தனது ஆரம்ப வாசகர்களுக்குக் குறித்திருந்தார். இப்போது வேதத்தின் ஏனைய பகுதிகளைப் போலவே இந்தப் பகுதிகளையும் அவற்றின் வரலாற்றுப் பரிமாணங்களை நாம் தவறாகப் புரிந்து கொள்ளாதபடி கவனமாக விளக்க வேண்டும். இருப்பினும், பிற*

*வேதாகம எழுத்தாளர்களும், இயேசுவும் கூட ஆதியாகமம் 1 - 11 இல் உள்ள சம்பவங்கள் நம்பத்தகுந்த வரலாறு என்று கருதினர் என்பது தெளிவாகிறது. பண்டைய காலங்களில் உண்மையில் என்ன நடந்தது என்பதற்கான உண்மையான மற்றும் நம்பகமான பதிவுகளே இந்த அதிகாரங்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இப்பாடங்கள் அமைந்துள்ளன.*

ஆதி கால வரலாறு நம்பகமானது என்று நாம் விசுவாசிக்கும் வேளையில், ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பின் படி இந்த அதிகாரங்களின் பொருளைத் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்த தேவன் மோசேயை ஏவினார் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

## வடிவமைப்பு

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: ஆதியாகமம் 1 - 11 ல் உள்ள அதிகாரங்கள், சிருஷ்டிப்பு முதல் கி.மு 2000 - 1800 காலகட்டத்தில் வாழ்ந்த ஆபிரகாம் நாட்கள் வரையிலுள்ள முழு உலக வரலாற்றைப் பற்றிப் பேசுகிறது. இதில் மோசே அந்தக் காலகட்டத்தில் குறிப்பிட்ட உலக சம்பவங்களை விட குறிப்பிடாதவை அதிகம் என நாம் ஒப்புக்கொள்ளக் கூடும். எனவே ஆதியாகமம் 1 - 11 யை புரிந்துகொள்ள இவை வரிசைப்படுத்தப்பட்ட விதத்தையும் தேர்வு செய்யப்பட்ட விதத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். மோசே இந்தப் பண்டைய வரலாற்றை எப்படி ஒரு நோக்கத்துடன் வடிவமைத்தார் என்பதை நாம் கவனிக்கும்போது, மிக முக்கியமான சில கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க முடியும். தேவன் மோசேயை ஏன் இந்த சிறு செய்தியைச் சேர்க்கும்படி ஏவினார்? மேலும் தெரிந்துகொள்ளப்பட்ட சம்பவங்களை இவ்வாறு ஒழுங்குபடுத்தும்படி மோசேயிடம் தேவன் ஏன் கூறினார்?

மோசே இதை இவ்வாறு ஏன் எழுதினார் என்பதைப் புரிந்து கொள்ள, நாம் முதலில் அவருடைய காலத்தில் இருந்த இலக்கியப் பாரம்பரியங்களின் பின்னணியைப் பார்க்க வேண்டும்.

# பின்னணி

பண்டைய கிழக்கத்திய தேசங்களின் இலக்கியம் நம் நோக்கங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனென்றால் முதலாவது, மற்ற பழங்காலப் புள்ளிவிவரங்கள் மோசேக்கு பரவலாகக் கிடைத்தன. இரண்டாவதாக, மோசே உண்மையில் ஏனைய பழங்காலப் புள்ளிவிவரங்களுடன் தொடர்பு கொண்டார்.

## கிடைக்கப்பெற்றவை

உலகத் தோற்றம் பற்றி எழுதிய முதல் நபர் மோசே அல்ல என்பதைத் தொல்பொருள் ஆராய்ச்சி நிரூபித்துள்ளது. நிச்சயமாக தேவன் மோசேயை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏவினபடியால் அவருடைய புள்ளிவிவரங்கள் உண்மையாக இருந்தது. ஆனால், கிழக்கில் உள்ள பல தேசங்களும் குழுக்களும் ஏற்கனவே பழங்கால வரலாறு பற்றி பல புராணங்களையும், இதிகாசங்களையும் எழுதியிருந்த நாட்களில் மோசே இதை எழுதினார்.

இந்தப் பழங்கால நூல்களில் சில நன்கு அறியப்பட்டவை. *எனுமா எலிஷ்,* பாபிலோனிய படைப்பின் கதை, *கில்காமேஷ் காவியத்தின்* "டேப்லெட் லெவன்" அல்லது பாபிலோனிய வெள்ளக் கதை போன்ற விஷயங்களைப் பற்றி பலர் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆதிகாலப் புள்ளிவிவரங்களின் தொகுப்பு எகிப்து மற்றும் கானானில் எழுதப்பட்டது. இத்தொகுப்புகளும், பண்டைய உலகின் பல ஆவணங்களும் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் ஆரம்பகால வரலாற்றைக் கையாள்கின்றன.

அது மட்டுமல்லாமல், இந்தப் பழங்கால கிழக்கத்திய தேசங்களின் பல ஆவணங்கள் மெய்யாகவே மோசேயின் இளமைக்காலத்தில் அவருக்குக் கிடைத்தன. மோசே எகிப்தின் அரமனையில் கல்வி கற்றதால், அவருடைய எழுத்துக்கள் அவர் பண்டைய உலகின் இலக்கியங்களை அறிந்திருந்ததைக் குறிக்கிறது. மோசே, தெய்வீக ஏவுதல் மற்றும் பழங்காலத்தின் உண்மையான புள்ளிவிவர பதிவை தானே சொந்தமாக எழுதியதால், பழங்கால கிழக்கத்திய தேசங்களின் பிற இலக்கிய மரபுகளை அவர் நன்கு அறிந்திருந்தார்.

மற்ற பழங்காலப் புள்ளிவிவரங்கள் மோசேக்குக் கிடைத்தன என்பதை அறிந்த நாம், அந்தக் கலாச்சாரங்களின் புராணங்கள் மற்றும் இதிகாசங்களுடன் மோசே எவ்வாறு தொடர்பு கொண்டார் என்ற இன்னொரு கேள்வியைக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

## உரையாடல்

இந்தப் பாடத்தொடர் முழுவதும் நாம் பார்ப்பது போல், மோசே மற்ற பழங்காலப் பாரம்பரியங்களுடன் எதிர்மறையாகவும் நேர்மறையாகவும் தொடர்புகொண்டார்.

ஒருபுறம், பொய்யை உண்மையினால் எதிர்கொள்ள மோசே ஆரம்ப கால வரலாற்றை எழுதினார். மோசே வழிநடத்திய இஸ்ரவேலர்கள் எல்லா விதமான அந்நிய வழிகளுக்கு உட்படுத்தப்பட்டதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் பல தெய்வங்களின் முயற்சி மற்றும் போராட்டங்களின் விளைவாக பூமி உருவானது என நம்பத் தூண்டப்பட்டார்கள். ஒன்று தங்கள் மூதாதையர்களின் உண்மையான நம்பிக்கையை நிராகரித்தனர் அல்லது இந்த உண்மையை மற்ற நாடுகளின் மத நம்பிக்கைகளுடன் கலந்தனர். பல விஷயங்களில், காரியங்கள் உண்மையில் எப்படி நடந்தது என்று தேவஜனங்களுக்குக் கற்பிப்பதற்காக மோசே பழங்காலத்தைப் பற்றி எழுதினார். அவர் மற்ற மதங்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பொய்களுக்கு எதிராக யேகோவா தேவனின் உண்மைத்தன்மையை நிறுவ முயன்றார்.

அதே வேளையில், மோசே தான் வாழ்ந்த காலத்து இலக்கிய மரபுகளை நேர்மறையாகத் தொகுத்து தவறான கட்டுக்கதைகளை மறுக்கும் இந்த எதிர்மறை நோக்கத்தை நிறைவேற்றினார். அவரது எழுத்துக்கள் திட்டமிட்டே மற்ற பழங்கால கீழ் தேசத்து எழுத்துக்களை ஒத்திருந்தன. இப்படியாக அவர் தேவனின் உண்மையை இஸ்ரவேல் மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் தெரியப்படுத்தினார். மோசேயின் புள்ளிவிபரங்களுக்கும் பல முக்கிய நூல்களுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருந்தாலும், சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட இலக்கிய பாரம்பரியத்துடன் ஆச்சரியமான ஒற்றுமையை சுட்டிக்காட்டியுள்ளது.

1969 இல் *அட்ராஹாசிஸ்: பாபிலோனிய வெள்ளத்தின் கதை* என்ற தலைப்பில், ஒரு முக்கியமான ஆவணம் வெளியிடப்பட்டது. இந்த ஆவணத்தின் பாரம்பரியம் எவ்வளவு பழமையானது என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஆனால் முன்பு தனித்தனியாக அறியப்பட்ட பல சம்பவங்களை இது ஒரே சம்பவமாக எடுத்துச் சொல்கிறபடியால் இது நமக்கு மிகவும் முக்கியமாகும்.

*அட்ராஹாஸிஸ் காவியம்* அடிப்படையில் பின்வரும் மூன்றுவித கட்டமைப்பைப் பின்பற்றுகிறது: இது மனுக்குலத்தின் சிருஷ்டிப்புடன் தொடங்குகிறது. மனுக்குலத்தின் சிருஷ்டிப்பைத் தொடர்ந்து ஆதிகால மனிதனின் வரலாற்றை, குறிப்பாக மனிதனால் உலகம் சீர்குலைந்ததில் கவனம் செலுத்துகிறது. இந்தச் சீர்குலைவு இறுதியாக, ஜலப்பிரளயத்தின் மூலம் ஏற்பட்ட தீர்ப்பினால் சரிசெய்யப்பட்டு ஒரு புதிய உலக ஒழுங்கு ஏற்பட்டது.

*அட்ராஹஸிஸுடன்* ஆதியாகமத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், மோசே தனது சாதனையை வேண்டுமென்றே மேம்பட்ட கட்டமைப்போடு உருவாக்கினார் என்ற கருத்து விளங்கும். ஆதியாகமம் 1 முதல் 11 வரை முதலில் வாசிக்கும்போது, ஒரு தலைப்பிலிருந்து மற்ற தலைப்புக்குத் தொடர்பில்லாமல் இருக்கும் சம்பவங்களின் ஒரு தொகுப்பு போல் காணப்படலாம். ஆனால் *அட்ராஹாஸிஸின்* விசாலமான இலக்கிய இணைகளுடன் கவனித்தால் மோசேயின் ஆதிகால வரலாறு ஒரு விரிவான அமைப்பைக் கொண்ட ஒரே கதையம்சமாக இருப்பதைக் காண முடியும்.

ஆதியாகமம் 1 – 11 மூன்று பகுதிகளாகப் பிரிகிறது: முதலில் 1 : 1 – 2 : 3 இல் நேர்த்தியான படைப்பு; இரண்டாவது, ஆதியாகமம் 2 : 4 – 6 : 8 இல் மனித பாவத்தின் காரணமாக உலகின் சீர்குலைவு; இறுதியாக, ஆதியாகமம் 6 : 9 – 11 : 9 இல் ஜலப்பிரளயம் மற்றும் புதிய ஒழுங்கு.

இப்போது நாம் மூன்றாவது கேள்வியைக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்: மோசே ஏன் ஆதியாகமம் 1 – 11 யை எழுதினார்? அவர் தனது இஸ்ரவேல் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்பினார்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நோக்கம்

அடிப்படையில் மோசே இஸ்ரவேலர்களுக்கு கடந்தகால உண்மைகளைப் போதிக்க விரும்பினார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். உலக வரலாற்றின் ஆரம்ப காலங்களில் அவர்களின் தேவன் என்ன செய்திருந்தார் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். மற்ற தேசங்களின் புராணங்கள் அந்த புராணக் கண்ணோட்டங்களை மக்களுக்கு நம்ப வைக்க ஏற்படுத்தப்பட்டது போல, மோசேயும் இஸ்ரவேலர்களை அவர்கள் நம்பிக்கையின் வரலாற்று உண்மைகளை நம்ப வைக்க வகை தேடினார்.

ஆனால் கூர்ந்து ஆராய்ந்தால், மோசேயின் பழங்கால வரலாற்றின் பின்னால் ஒரு கூடுதல் நோக்கத்தைக் காணப் போகிறோம். குறிப்பாக, இஸ்ரவேலர்கள் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்படி அவர்களைத் தூண்டும் வகையில் எழுதினார். இப்போது, இந்தக் கூடுதல் நோக்கம் ஆதியாகமம் 1 – 11 யை வாசிக்கும் அனைவருக்கும் தெளிவாகத் தெரிவதில்லை. ஆனால் மற்ற பழங்காலப் புள்ளிவிவரங்களும் அதே நோக்கத்தைப் பகிர்ந்து கொண்டதை அறியும்போது நமக்கு அது தெளிவாகிறது.

பண்டைய உலகின் பழங்கால விபரங்களின் நோக்கத்தை புரிந்துகொள்வதற்கு முன், பல பழங்கால கிழக்கத்தியக் கலாச்சாரங்கள், இப்பிரபஞ்சம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய ஞானத்தின்படி கட்டமைக்கப்பட்டது அல்லது வடிவமைக்கப்பட்டது என்று நம்பியது என்பதை நாம் உணர வேண்டும். அதன் சிறந்த நிலையில், பிரபஞ்சம் இந்த ஞானம் அல்லது தெய்வீக ஒழுங்கின்படி இயங்கியது. அடிமை முதல் அரசன் வரை இந்த தெய்வீக ஒழுங்கிற்கு கட்டுப்பட்டு நடப்பது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு நபரின் கடமையாகும்.

இதற்கும், கிழக்கத்திய பழங்காலப் புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் என்ன சம்பந்தம்? இஸ்ரவேலைச் சுற்றியிருந்த கலாச்சாரங்கள் தொன்மையான விபரங்களைக் கொண்டிருந்தன. அவை காலத்தின் ஆரம்ப நிகழ்வுகளைப் பற்றிப் பேசின. பண்டைய காலத்தின் தேவர்கள் உலகில் நிறுவின கட்டமைப்புகளை விளக்கும் பொருட்டு அவர்கள் இதைச் செய்தனர். பழங்காலத்தைப் பற்றிய அவர்களின் மரபுகள் ஆரம்பகால உலக வரலாற்றுடன் மட்டும் தொடர்புடையதாக இருக்கவில்லை. அதோடு, அவர்களின் தற்போதைய மத மற்றும் சமூகத் திட்டங்களை நியாயப்படுத்தவே அவர்கள் தங்கள் பழங்கால விபரங்களை எழுதினர். இந்த உரைகளை எழுதியவர்கள் பெரும்பாலும் ஆசாரியர்களாக இருந்தவர்கள். அவர்களுடைய தேவர்கள் உலகம் தங்கள் காலங்களில் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காண்பிப்பதற்காக ஏற்பாடு செய்த வழிகளைச் சுட்டிக்காட்டினர். சில சமயங்களில் அவர்கள், குறிப்பாகக் கோவில்கள், பூசாரிகள் மற்றும் சடங்குகள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எந்தக் கோவில் தேவர்களால் விரும்பப்பட்டது, எந்த ஆசாரியனின் குடும்பம் சேவை செய்ய வேண்டும் போன்ற மத விஷயங்களில் கவனம் செலுத்தினர். மற்ற நேரங்களில் அவர்கள் அரசியல் அதிகாரம், சட்டங்கள், யார் ராஜாவாக இருக்க வேண்டும், மற்றும் சிலர் ஏன் அடிமைகளாக இருந்தனர் போன்ற பரந்த சமூக கட்டமைப்புகளில் அக்கறை கொண்டிருந்தனர். அவர்களின் புராணங்கள் மக்களை அவர்களின் தேவர்கள் பிரபஞ்சத்திற்காக ஏற்படுத்திய அமைப்புகளான சிருஷ்டிப்பின் நியமங்களுக்கு இணங்கும்படி அழைப்பு விடுத்தன.

இந்தப் பாடங்களில் நாம் பார்ப்பதுபோல், மோசே இதைப் போன்ற காரணங்களுக்காக ஆதியாகமம் 1 – 11 ஐ எழுதினார். ஒருபுறம் மோசே தனது பழங்கால வரலாற்றை, முந்தைய காலங்களில் யேகோவா தேவன் உலகை உருவாக்கி ஒழுங்குபடுத்திய விதத்தை ஒரு வெளிப்படையான நோக்கத்துடன் எழுதினார். சிருஷ்டிப்பு முதல் பாபேல் கோபுரம் வரை மோசே இஸ்ரவேலரிடம் நீண்ட காலத்திற்கு முன்பு நடந்த விஷயங்களைப் பற்றிக் கூறினார். ஆனாலும் வரலாற்று ஆர்வத்தினால் மட்டும் அவர் இதைச் செய்யவில்லை. மோசே இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராய் வழிநடத்தியபோது, இஸ்ரவேல் புத்திரர்களைத் தவறாக வழிநடத்தியதாகக் கருதிய பல பகைஞர்களை அவர் எதிர்கொண்டார். இந்த எதிர்ப்புக்கு பதிலளிக்கும் விதமாக, இஸ்ரவேலுக்கான மோசேயின் கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் தேவனுடைய பிரபஞ்ச வடிவமைப்பிற்கு உண்மையானவை என்பதைப் பழங்கால வரலாறு நிரூபித்தது. இதன் விளைவாக, மோசேயின் திட்டத்தை எதிர்ப்பது கர்த்தரின் கட்டளைகளை எதிர்ப்பது போலாகும்.

ஆதியாகமம் 1 : 1 – 2 : 3 இல் காணப்படும் சிருஷ்டிப்பைப் பற்றிய தனது முழுமையான பதிவில், இஸ்ரவேல் உண்மையில் கானானை நோக்கிச் செல்வதன் மூலம் தேவனுடைய சித்தத்தை நோக்கி நகர்கிறது என்பதை மோசே சுட்டிக்காட்டினார். 2 : 4 - 6 : 8 இல் உலகச் சீர்குலைவு பற்றிய தனது பதிவில் மோசே, எகிப்து என்பது பாவத்தினால் வந்த தேவனுடைய சாபத்தினிமித்தம் ஏற்பட்ட சீர்கேடு மற்றும் கஷ்டங்களின் இடம் என்று காட்டினார். இறுதியாக, ஆதியாகமம் 6 : 9 – 11 : 9 இல் ஜலப்பிரளயம் மற்றும் அதன் விளைவாக வந்த புதிய ஒழுங்கு பற்றிய தனது பதிவில் மோசே, தமக்கு முன்பிருந்த நோவா உலகிற்கு புதிய ஒழுங்கையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்ததைப் போல, தாமும் இஸ்ரவேலைப் பல ஆசீர்வாதங்களுடன் கூடிய ஒரு புதிய ஒழுங்கிற்குள் கொண்டுவருவதாகக் காண்பித்தார். இஸ்ரவேலின் எதிர்காலத்திற்கான மோசேயின் நோக்கத்தை இந்தப் பழமையான உண்மைகள் முழுமையாக நியாயப்படுத்தின. இந்த உண்மைகளை அவர் இஸ்ரவேலுக்கு உணர்த்துவிக்க முடிந்திருந்தால், உண்மையுள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விலகி கானான் தேசத்தைத் தங்கள் தெய்வீகச் சுதந்திரமாக எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

இப்போது நாம் ஆதியாகமம் 1 - 11 இல் பழங்கால வரலாற்றின் பொதுவான அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், ஆதியாகமம் 1 : 1 – 2 : 3 இல் விவரிக்கப்பட்டுள்ள தேவனுடைய நேர்த்தியான உலகம் பற்றிய விவரங்களை ஆதியாகமத்தின் முதல் பகுதியில் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இலக்கிய அமைப்பு - பெரும்பாலான சுவிசேஷகர்கள் வேதாமகத்தின் முதல் அதிகாரத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, அதன் விளக்கத்தைச் சூழ்ந்துள்ள அனைத்து சர்ச்சைகளையும் பற்றிச் சிந்திக்கிறார்கள். தேவன் உலகத்தை 6 சாதாரண நாட்களில் சிருஷ்டித்தாரா? ஆதியாகமம் 1 இன் ”நாட்கள்” பெரிய காலகட்டமாக அல்லது சகாப்தங்களாக இருந்தனவா? அல்லது ஆதியாகமம் 1 என்பது சற்றே கவிதை நடையுடன் அமைந்த, வரலாறு சாராத தேவனின் சிருஷ்டிப்பைப் பற்றிய கொண்டாட்டமா? இந்நிலைகள் அனைத்தும் சுவிசேஷ சபை வட்டாரங்களுக்குள் ஏற்கப்பட்டுள்ளன. ஆதியாகமம் 1, இன்று நமக்குத் தெரிந்தபடி தேவன் உலகை ஆறு சாதாரண நாட்களில் படைத்தார் என்று போதிக்கிறது என்பது என்னுடைய சொந்தக் கருத்து என்றாலும், வேதத்தை விசுவாசிக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் இந்தக் கருத்தை ஏற்பதில்லை.

இந்தப் பாடங்களில் ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களை நாம் அணுகும்போது, இது போன்ற வரலாற்றுப் பிரச்சனைகளுக்கு பதிலாக, இலக்கியக் கேள்விகளில் அதிக அக்கறை கொண்டுள்ளோம். இந்த அதிகாரத்தை மோசே ஏன், எப்படி எழுதினார் என்பதை அறிவதிலேயே அதிக ஆர்வம் கொண்டுள்ளோம். இந்த அதிகாரத்தில் எந்த இலக்கியக் கட்டமைப்புகள் தோன்றுகின்றன? மோசேயின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள இந்தக் கட்டமைப்புகள் எவ்வாறு நமக்கு உதவுகின்றன?

இந்தப் பத்தியில் ஆரம்பம், இடைப்பட்ட மற்றும் முடிவு என்னும் மூன்று முக்கிய நிலைகள் உள்ளன என்பதை நாம் கவனிக்க வேண்டும். மோசேயின் சிருஷ்டிப்பு பதிவு 1 : 1 - 2 இல் தொடங்குகிறது. இந்த வசனங்களின் பொருளடக்கத்தை நாம் ”இருண்ட குழப்பமான உலகம்” என்று சுருக்கமாகக் கூறலாம். அதிகாரம் 1 : 3 - 31 இதன் நடுப்பகுதியாக உள்ளது. இது ”சிருஷ்டிப்பின் ஆறு நாட்கள்” அல்லது நாம் ”ஒழுங்குபடுத்துதலின் ஆறு நாட்கள்” என்று சொல்வதைக் கொண்டுள்ளது. இறுதியாக, 2 : 1 - 3 என்பது ஓய்வு நாள் அல்லது நாம் கூறுகிறபடி ”முழுமையான உலகம்” ஆகும்.

இருண்ட குழப்பமான உலகத்தில் ஆரம்பித்து, இப்பாடத்தின் மூன்று பகுதிகளையும் நாம் ஆராய்வோம். இரண்டாவதாக, முழுமையான உலகத்தைக் கையாளும் கடைசிப் பகுதியை ஆராய்வோம். இறுதியாக, ஒழுங்குபடுத்துதலின் ஆறு நாட்களை ஆராய்வோம். முதலில் 1 : 1 - 2 இல் காணப்படும் இருண்ட குழப்பமான உலகத்தை பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இருண்ட குழப்பமான உலகம்

ஆதியாகமம் 1 இன் முதல் பகுதியைப் பார்க்கும்போது, பூமியைச் சூழ்ந்துள்ள குழப்பத்திற்கும் தேவ ஆவியானவருக்கும் இடையே முக்கியமான ஒரு வியத்தகு பதற்றத்தைக் காண்கிறோம்.

1 : 1 - 2 இன் தொடக்கம், முதலாம் வசனத்திற்கு ஒரு தலைப்பை வழங்குவதின் மூலமும், இரண்டாம் வசனத்தில் உலகின் ஆரம்ப நிலைமையை விவரிப்பதின் மூலமும் ஒரு தளம் அமைக்கிறது. மோசே அதை 1 : 2 இல் கூறும் விதத்தைப் பாருங்கள்:

> பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதியாகமம் 1 : 2).

இந்த வசனம் இந்த முழு அதிகாரத்திலும் காணப்படும் வியத்தகு பதற்றத்தை அறிமுகப்படுத்துகிறது. இந்தக் கொந்தளிப்பின் ஒருபுறம், உலகம் “ஒழுங்கின்மை மற்றும் வெறுமை” அல்லது எபிரெய மொழியில் சொல்வது போல் *துஹு வாபோஹு tōhû wābōhû* (תֹהוּ וָבֹהוּ) எனப்படுகிறது. இதன் துல்லியமான அர்த்தத்தை அறியும் வகையில் இந்த எபிரேய பதம் வேதத்தில் அடிக்கடி தென்படுவதில்லை. ஆனால் பல அறிஞர்கள் இதற்கு, வாழத் தகுதியற்ற உலகம், மனித வாழ்க்கைக்கு எதிரான, மனிதன் வாழச் சாதகமில்லாத பாலைவனம் அல்லது வனாந்தரப்பகுதி என்று அர்த்தம் என நம்புகிறார்கள். எனவே, இந்தப் பத்தியின் தொடக்கத்தில் ஒரு வாழ முடியாத, இருண்ட, பழமையான, குழப்பம் ஆழமாக முழுப் பூமியையும் மூடியிருந்ததை நாம் பார்க்கிறோம்.

இந்த வியத்தகு பதற்றத்தின் இரண்டாவது பதம் 1 : 2 இல் தோன்றுகிறது. ”தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்” என்று மோசே எழுதுகிறார். இங்கு பயன்படுத்தப்படும் எபிரேய வார்த்தை *மெராச்செஃபெட் merachefet* (מְרַחֶפֶת) அதற்கு ”மேலே பறக்கும்” அல்லது ”மேலே வட்டமிடும்” என்று பொருள்.

எனவே இந்தப் பகுதியின் தொடக்கத்திலேயே ஒரு வியத்தகு காட்சியைப் பார்க்கிறோம். ஒருபுறம் பூமியில் குழப்பத்தைக் காண்கிறோம்; மறுபுறம் தேவ ஆவியானவர் குழப்பத்தின் மேலாக அசைவாடிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். உண்மையில், பூமியை மூடியிருக்கும் குழப்பத்தைச் சரிசெய்ய தேவன் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தார். இந்த ஆரம்ப வியத்தகு பதற்றம் பின்வரும் பல கேள்விகளை எழுப்பியது: தேவ ஆவியானவர் என்ன செய்வார்? இந்தக் குழப்பங்கள் என்னவாகும்? தொடக்க வசனங்களில் ஆரம்பிக்கும் இந்த விசித்திர



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பதற்றத்தை மனதில் கொண்டு, மோசேயின் சிருஷ்டிப்புப் பதிவின் இறுதிப் பகுதியில் இந்த பதற்றத்தின் தீர்வைப் பார்க்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்: அது ஆதியாகமம் 2 : 1 - 3 இல் காணப்படும் சிறந்த உலகமாகும்.

## முழுமையான / சீரான உலகம்

இந்தப் பிரிவு மிகவும் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 2 : 1 இல் தேவன் தமது சிருஷ்டிப்பை முடித்துவிட்டதைப் பற்றிய சுருக்கமான வாக்கியத்துடன் தொடங்கும் இது, 2 : 2 - 3 இல் தேவன் ஓய்வெடுப்பதில் முடிகிறது. ஆதியாகமம் 2 : 2 - 3 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (ஆதியாகமம் 2 : 2 - 3)

தேவன் அந்த நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கி ஓய்ந்திருந்தார் என்று மோசே விவரிக்கும் போது, பூமியைச் சூழ்ந்திருந்த குழப்பத்திற்கும் அசைவாடிக்கொண்டிருந்த தேவ ஆவியானவருக்கும் இடையே இருந்த பதற்றம் தீர்ந்ததாக அறிவித்தார். தேவன் இருளைக் கீழ்படுத்தி, குழப்பம் மிகுந்த ஆழத்தை ஆளுகை செய்து, சீர்படுத்தப்பட்ட உலகத்தினிமித்தம் மகிழ்ச்சியடைந்தார். இப்படியாக, பரிபூரண இசைவுடன் அமைந்த பிரபஞ்சத்தின் மகிழ்ச்சியும், சமாதானமும் நிறைந்த காட்சியுடன் சிருஷ்டிப்பின் கதை நிறைவடைகிறது.

மோசேயின் சிருஷ்டிப்புப் பதிவு எவ்வாறு தொடங்கி முடிகிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம். அதே வேளையில் குழப்பமான உலகத்துக்கும் அசைவாடிக் கொண்டிருந்த தேவ ஆவியானவருக்கும் இடையிலான பதற்றம் எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பதை விவரிக்கும் இந்த பத்தியின் நடுப்பகுதியை நாம் பார்க்க வேண்டும்.

## ஒழுங்குபடுத்தலின் ஆறு நாட்கள்

ஆதியாகமம் 1 : 3 - 31 இல் விவரிக்கப்பட்டுள்ள ஒரு அற்புதமான ஆறு நாள் திட்டத்தின்படி உலகை ஒழுங்குபடுத்தியதின் மூலம் தேவன் குழப்பத்தைத் தடுத்தார் என்று இந்தப் பத்தி கற்பிக்கிறது. "பின்பு தேவன்:" என்ற செயல் சார்ந்த வாக்கியத்தை மோசே மீண்டும் மீண்டும் அறிமுகப்படுத்தியதைக் காணும்போது இப்பகுதியின் மையம் நமக்குத் தெளிவாகிறது. ஏனென்றால், தேவனே இப்பகுதியின் முக்கிய கதாபாத்திரமாகவும் அவரது வல்லமையுள்ள வார்த்தை இந்த வசனங்களின் மையமாகவும் உள்ளன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனின் வார்த்தை உலகிற்கு அற்புதமான ஒழுங்கைக் கொண்டுவந்தது. பிற கலாச்சாரங்களைச் சேர்ந்த பல புராண தேவர்களைப் போலல்லாமல், இஸ்ரவேலின் தேவன் சிருஷ்டிப்பின் போது எந்தப் போராட்டங்களையும் போர்களையும் எதிர்கொள்ளவில்லை. அவர் பேசினார், உலகம் தன்னை ஒழுங்குபடுத்திக்கொண்டது. அதற்கும் மேலாக, தேவன் பேசிய வார்த்தை அவருடைய வல்லமையுள்ள ஞானத்தைக் காண்பித்தது. தேவன் தமக்கு மிகவும் நலமாய்த் தோன்றியபடி உலகை அமைத்தார்.

தேவன் ஒழுங்குபடுத்தி சிருஷ்டித்தது ஒவ்வொன்றும் மூன்று நாட்கள் அடங்கிய இரண்டு தொகுப்புகளாகும் என்பதை பல மொழிபெயர்ப்பாளர்கள் அங்கீகரித்துள்ளனர்: அவை, 1 முதல் 3 ஆம் நாள் வரை மற்றும் 4 முதல் 6 ஆம் நாள் வரை. இந்த இரண்டு தொகுப்பு நாட்களுக்கிடையிலான தொடர்புகள் பல வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளன, மேலும் இவற்றுக்கிடையில் பல இணைப்புகள் உள்ளன.

ஆதியாகமம் 1: 2 இல் பூமியின் விபரத்தைக் கண்டறிவது இந்த அமைப்புகளை நமக்குப் பரிச்சயப்படுத்திக்கொள்ள உதவும் ஒரு பயனுள்ள வழியாகும். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் *தோஹு வாபோஹு tōhû wābōhû* (תֹהוּ וָבֹהוּ) இருந்தது என்று மோசே சொன்னது நினைவிருக்கலாம் இது, மூன்று நாட்கள் அடங்கிய இரண்டு தொகுப்புகளின் முக்கியத்துவத்தை விளக்கப் பயன்படும்.

ஒருபுறம், முதல் மூன்று நாட்களில், பூமி ”ஒழுங்கின்மையாயிருந்தது” என்ற நிலையை தேவன் கையாண்டார். அதாவது, ஒரு பகுதியை இன்னொரு பகுதியிலிருந்து பிரித்து தனது சிருஷ்டிப்பில் கோளங்கள் அல்லது களங்களை அமைப்பதன் மூலம் அவர் தனது படைப்புக்கு வடிவம் கொண்டு வந்தார். மறுபுறம், கடைசி மூன்று நாட்களில், ”வெறுமையாக” அல்லது ”வெற்றிடமாக” இருந்த குழப்பம் மிகுந்த உலகத்தை தேவன் சரிப்படுத்தினார். அவர் படைத்த சகல களங்களையும் ஜீவராசிகளால் நிரப்புவதே தேவனின் தீர்வாக இருந்தது.

முதல் மூன்று நாட்களைப் பாருங்கள். முதலாம் நாளில் பகலை இரவிலிருந்து பிரித்தார். சூரியன் இல்லாதிருக்கும்போதே தேவன் இருண்ட குழப்பமான உலகத்தில் இருளின் மீது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்தார்.

இரண்டாம் நாளில் தேவன் பூமிக்கு மேல் ஒரு ஆகாயவிரிவை உண்டுபண்ணி, கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார். இந்த தெய்வீகச் செயல் உருவாக்கியதைத் தான் கிரகத்தின் வளிமண்டலம் என இப்போது நாம் அழைக்கிறோம். இது பூமியில் உள்ள ஜலத்தை மேலே வானத்தில் உள்ள ஈரப்பதத்திலிருந்து பிரிக்கிறது.

மூன்றாம் நாளில் தேவன் பாழான நிலத்தை சமுத்திரத்திலிருந்து பிரித்தார். சமுத்திரங்கள் பூமியின் பகுதிகளில் ஒதுக்கப்பட்டு, நிலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தோன்றியது. நிலத்தில் பயிர்கள் வளர ஆரம்பித்தன. எனவே இந்த முதல் மூன்று நாட்களில் தானே தேவன் ஒழுங்கில்லாமல் இருந்த பூமிக்கு வடிவம் கொடுத்தார். வெளிச்சம் மற்றும் இருளின் என்னும் பகுதிகளை அவர் அமைத்தார். வானம் மேலே உள்ள தண்ணீரையும், கீழே உள்ள தண்ணீரையும், பூமியின் பாழான நிலத்தையும் பிரிக்கிறது.

மோசேயின் பதிவின்படி, தேவன் முதல் மூன்று நாட்களில் இப்பகுதிகளை உருவாக்கியதன் மூலம் பூமியின் ஒழுங்கற்ற தன்மையைக் கையாண்டார். பின்னர் தேவன் இந்தப் பகுதிகளில் ஜீவராசிகளை குடியிருக்கப்பண்ணி கடைசி மூன்று நாட்களில் பூமியின் வெறுமையையும் கையாண்டார். நான்காம் நாளில் தேவன் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை வானத்தில் வைத்து, முதல் நாளில் உருவாக்கிய ஒளி மற்றும் இருளின் இடங்களை நிரப்பினார். இந்த வானமண்டலக் கோள்கள் இரவையும் பகலையும் ஆளவும் இரவையும் பகலையும் தனித்தனியாக பிரிக்கவும் வானத்தில் வைக்கப்பட்டன.

ஐந்தாம் நாளில் தேவன் ஆகாயத்தில் பறவைகளையும், சமுத்திரங்களில் கடல் வாழ் உயிரினங்களையும் வைத்தார். இந்த உயிரினங்கள் இரண்டாம் நாளில் ஜலத்தின் மேலேயும் கீழேயும் உருவாக்கப்பட்ட பகுதிகளை நிரப்பின.

இறுதியாக ஆறாவது நாளில் தேவன் மிருகங்களையும் மனிதனையும் நிலத்தில் குடிவைத்தார். இந்த ஜீவராசிகள் மூன்றாம் நாளில் தேவன் கடலில் இருந்து பிரித்த வறண்ட நிலத்தை நிரப்பின. சிருஷ்டிப்பு முழுவதையும் மோசே இந்தப் பகுதிகளிலும் அவற்றின் ஜீவராசிகளிலும் ஒன்று சேர்த்துள்ளார். ஒரு வார்த்தையில் சொன்னால், தேவன் ஆறு நாட்கள் செலவழித்து இருண்ட குழப்பமிகு உலகத்தில் ஒர் மகிமையான ஒழுங்கைக் கொண்டு வந்தார். அவரது படைப்பு மிக அருமையாயிருந்தபடியால் ஆறு முறை தேவன் இவ்வாறு கூறினார்:

> ”தேவன் அது நல்லது என்று கண்டார்” (ஆதியாகமம் 1 : 4, 10, 12, 18, 21, 25).

நிலத்தில் மனிதனை வாழும்படி செய்த பிறகு அவர் சொன்னது:

> ”அது மிகவும் நன்றாயிருந்தது” (ஆதியாகமம் 1 : 31).

தேவன் தம் சிருஷ்டிப்பினிமித்தம் மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்று மோசே மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். எனவே ஆதியாகமம் 1 : 1 – 2 : 3 திட்டமிட்டே மிகவும் சிக்கலான ஒரு அமைப்பைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்தப்பகுதி, ஒழுங்கின்மையாக இருந்த உலகம், தேவன் அதில் கிரியை செய்வார் என்று தொடங்குகிறது. இந்த ஒழுங்கின்மையான உலகத்தில் தேவன் ஆறு நாட்கள் ஒழுங்கைக் கட்டளையிட்டார். இதன் விளைவாக, ஏழாவது நாளில் தேவன் உலகில் கொண்டு வந்த நேர்த்தியான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒழுங்கினிமித்தம் மகிழ்ந்து தனது ஓய்வுநாளை அனுபவித்தார். ஆதியாகமம் 1:1 – 2:3 இன் பரந்த இலக்கிய அமைப்பை இப்போது நாம் பார்த்திருக்கிறதினால், இந்தப் பத்தியின் உண்மையான அர்த்தம் எவ்வாறு தெரிவிக்கப்படுகிறது என்பதைப் பார்க்க முடிகிறது.

# உண்மையான அர்த்தம்

உலக வரலாற்றின் ஆரம்பத்தில் தேவன் நிர்ணயித்தபடியே இஸ்ரவேல் மக்களின் யாத்திரையையும் சுதந்தரிப்பையும் உறுதிப்படுத்தும் வண்ணம் மோசேயின் ஆதிகாலத்து வரலாறு அமைக்கப்பட்டது என்று ஏற்கனவே விரிவாகப் பார்த்தோம். ஆனால் 1:1 – 2:3 என்ற குறிப்பிட்ட பதிவில் இந்த பொது நோக்கம் எவ்வாறு தன்னை வெளிப்படுத்தியது? இஸ்ரேலுக்கான தனது ஊழியத்தை சிருஷ்டிப்புக் கதையுடன் மோசே எவ்வாறு இணைத்தார்?

மோசே இதை எப்படிச் செய்தார் என்பதை நாம் ஆதியாகமம் 1:1 - 2:3 இன் மூன்று முக்கிய பகுதிகளை மீண்டும் ஒருமுறை ஆராய்வோம். முதலில், இருண்ட குழப்பமான உலகத்தைப் பார்ப்போம். பின்னர் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட உலகின் கடைசிப் பகுதிக்கு நாம் செல்வோம். இறுதியாக இந்த வேத பகுதியில் தேவன் உலகை ஒழுங்காக்கிய நடுப்பகுதிக்குத் திரும்புவோம். முதலில் 1:1 - 2 இல், இருண்ட குழப்பமான உலகத்தைப் பார்ப்போம்.

## இருண்ட குழப்பமான உலகம்

நம் நோக்கங்களுக்காக, ஆதியாகமத்தின் முதல் இரண்டு வசனங்களின் மிக முக்கியமான அம்சம் வசனம் 2 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வியத்தகு பதற்றம் ஆகும். குழப்பமான உலகத்துக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையிலான வியத்தகு பதற்றத்தை மோசே விவரித்த விதம், அவர் படைப்பைப் பற்றி எழுதுவது மட்டுமல்ல, இஸ்ரவேலின் புறப்பாடு பற்றியும் எழுதுகிறார் என்பதை தெளிவுபடுத்தியது.

ஒருபுறம், ஆதியாகமம் 1:2 இல் மோசே பூமியை ”ஒழுங்கின்மையானது” அல்லது *தோஹு tōhû* என்று விவரித்ததை நீங்கள் நினைவுகூரலாம். மறுபுறம், அவர் தேவ ஆவியானவரை ”அசைவாடிக் கொண்டிருந்தார்” அல்லது எபிரெய மொழியில் *மெராச்செஃபெட்* என்று விவரித்தார். ஆதியாகமத்திலிருந்த இந்த வியத்தகு காட்சியை மோசே குறிப்பிட்டுள்ள ஒரு பத்தியில் பார்க்கும்போது இந்த காட்சியின் முக்கியத்துவம் தெளிவாகிறது. உபாகமம் 32:10 - 12 இல் மோசே ஆதியாகமம் 1:2 இன் சொற்களைப் பயன்படுத்தி இஸ்ரவேலின் பிரயாணம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் சிருஷ்டிப்புக் கணக்கிற்கு இடையேயான தொடர்பில் விசேஷ கவனம் செலுத்த முயன்றார். இந்த வசனங்களில் அவர் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்:

> பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் [தேவன்] அவனைக் கண்டுபிடித்தார். அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை (உபாகமம் 32 : 10 - 12).

மோசே தனது எல்லா எழுத்துக்களிலும் ”ஒழுங்கற்ற” மற்றும் ”அசைவாடுதல்” என்ற சொற்களைப் பயன்படுத்திய ஒரே இடம் அவை மட்டுமே என்பதால் இந்த வசனங்கள் முக்கியமானவை. 10 வது வசனத்தில், இங்கு ”பாழான” என்று மொழி பெயர்க்கப்பட்ட சொல், எபிரெய வார்த்தையான *டோஹூ tōhû* ஆகும். இது ஆதியாகமம் 1 : 2 இல் ”வடிவமற்றது” என உள்ளது. மேலும், வசனம் 11 இல், ”அசைவாடி” என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல் *மெராச்செஃபெட்* ஆகும். இது ஆதியாகமம் 1 : 2 இல் தேவ ஆவியானவர் ஆழத்தின் மீது ”அசைவாடும் போது” பயன்படுத்தப்படுகிறது. ஆதியாகமம் 1 உடன் உறுதியாக இணைப்பதற்காக மோசே இந்த இரண்டு சொற்களையும் உபாகமம் 32 இல் சேர்த்துள்ளார். ஆனால் இந்த சொற்களின் பயன்பாடு இந்த இணைப்பை எவ்வாறு கொண்டுவந்தது? உபாகமம் 32 இல் ” பாழான” மற்றும் ”அசைவாடுதல்” என்ற சொற்கள் எதைக் குறிக்கின்றன? முதலில், மோசே எகிப்துக்கு ”பாழான” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். 32 : 10 இல் நாம் இந்த வார்த்தைகளைப் படிக்கிறோம்:

> பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார் (உபாகமம் 32 : 10).

இரண்டாவது இடத்தில் இஸ்ரவேலுடன் தேவ சமூகம், மேக மற்றும் அக்கினி ஸ்தம்ப ரூபத்தில் இருந்ததினால் ”அசைவாடி” என்ற வார்த்தையை மோசே பயன்படுத்தினார். இவ்வாறு தேவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி அவர்களை வழிநடத்தினார். 32 : 10 - 11 இல் அங்கே இந்த வார்த்தைகளை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார்,
> கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல்
> அசைவாடுவது போல காத்தார் (உபாகமம் 32 : 10 - 11).

பல காரணங்களுக்காக, ஆதியாகமம் 1 : 2 இல் மோசே எழுதியவற்றின் விளக்கவுரையாக உபாகமம் 32 : 10 - 12 யை நாம் கருதலாம். அவர் ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் எழுதியது அவருடைய நோக்கத்தைப் பற்றிய நுண்ணறிவை நமக்கு அளிக்கிறது. சிருஷ்டிப்புக்கும் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலையானதற்கும் இடையே ஒரு இணையான சூழ்நிலையை மோசே கண்டார் என்பதை புரிந்துகொள்ள உபாகமம் 32 உதவுகிறது. சிருஷ்டிப்பும் இஸ்ரவேல் எகிப்திலிருந்து விடுதலையானதும் குழப்பமான, வாழ முடியாத உலகங்களை உள்ளடக்கியது என்று மோசே எழுதினார். தேவன் எகிப்தில் இருந்து இஸ்ரவேலை விடுவித்தபோது, இஸ்ரவேல் மீது அசைவாடியதைப் போல, இந்த குழப்பமான உலகத்திற்குள்ளும் அசைவாடினார் என்றும் அவர் எழுதினார். சிருஷ்டிப்புக்கும் எகிப்திலிருந்து இஸ்ரவேல் வெளியேற்றத்திற்கும் இடையிலான இந்த இணைகளிலிருந்து, இஸ்ரவேலிடம் சிருஷ்டிப்பைப் பற்றி மட்டும் சொல்வதற்காக மோசே இருண்ட குழப்பமான உலகத்தைப் பற்றி எழுதவில்லை என்பதை நாம் காணலாம். சிருஷ்டிப்பில் தேவனுடைய வேலையை ஒரு முன்வடிவமாகவும், ஒரு மாதிரியாகவோ அல்லது ஒரு முன்னுதாரணமாகவோ வழங்கினார், இது தேவன் தனது காலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்காக என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை விளக்கியது. சிருஷ்டிப்பில் தேவனுடைய அசல் வேலையைப் பற்றி மோசே எழுதியபோது, எகிப்திலிருந்து அவரைப் பின்தொடர்வதில் அவர்கள் தவறு செய்யவில்லை என்பதை தனது வாசகர்களுக்குக் காட்ட அவர் அவ்வாறு செய்தார். அதற்கு பதிலாக, சிருஷ்டிப்பானது எகிப்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டதை தேவனுடைய வல்லமையான செயல் என்பதை நிரூபித்தது. தேவன் எகிப்தின் குழப்பத்தில் இருந்து இஸ்ரவேலை விடுவிப்பதன் மூலம் உலகை ஆரம்பத்தில் செய்தது போல் மீண்டும் சரி செய்து கொண்டிருந்தார். தேவன் ஆரம்பத்தில் சிருஷ்டிப்பின் மீது அசைவாடியது போல் இஸ்ரவேல் மீதும் அசைவாடினார். எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் வெளியேறியது தேவன் தான் விரும்பிய ஒழுங்கை மீண்டும் உலகிற்கு கொண்டு வரும் பணியாக இருந்தது. இந்த நிகழ்வை ஒரு தவறு என்று சொல்ல முடியாது. ஒரு வார்த்தையில் சொல்வதானால், எகிப்திலிருந்து இஸ்ரவேல் விடுதலையடைந்தது என்பதை ஒரு மறு சிருஷ்டிப்பு என்று உறுதியாக சொல்லலாம். ஆதியாகமம் அதிகாரம் 1 இன் தொடக்கத்திற்கும், இஸ்ரவேல் எகிப்திலிருந்து வெளியேறிய அனுபவத்திற்கும் இடையே உள்ள இந்த இணையை மனதில் கொண்டு, இறுதிப் பகுதியைப் பார்க்கும்போது, இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னோக்கு சீரான ஒழுங்குபடுத்தப்பட்ட உலகமாக உறுதிப்படுத்தப்படுவதை இறுதி பகுதியில் உள்ள 2 : 1 - 3 இல் காணலாம்.

## முழுமையான / சீரான உலகம்

தேவன் தனது ஒய்வுக்குள் நுழைவதோடு சிருஷ்டிப்பின் கதை முடிவடைகிறது என்பதை நீங்கள் நினைவு கூர்வீர்கள். ஆதியாகமம் 2 : 2 - 3 இல் ”ஒய்வு” என்பதற்கான எபிரெய சொல் *ஷப்பாட்* (שָׁבַת) ஆகும், அல்லது நாம் சொல்வது போல், ”சப்பாத்” ஆகும். மேலும் இந்த சொல்லாக்கம் சிருஷ்டிப்பின் கதையை இஸ்ரவேல் எகிப்திலிருந்து வெளியேறியதுடன் மற்றொரு வழியில் இணைக்கிறது.

மோசே மற்றும் இஸ்ரவேலர்கள் *ஷப்பாட்* என்ற வார்த்தையை முதன்மையாக மோசேயின் சட்டத்தின்படி ஆசாரிக்கும் ஒய்வு நாள் அனுசரிப்புக்களைக் குறிக்கப் பயன்படுத்தினர். உண்மையில், யாத்திராகமம் 20 இல் உள்ள பத்து கட்டளைகளின் பட்டியலில், ஆதியாகமம் 2 இல் தேவன் செய்த காரியத்தின் காரணமாக இஸ்ரவேல் ஒய்வுநாளைக் ஆசரிக்க வேண்டும் என்று மோசே விளக்கினார்.

> ஒய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக… கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஒய்ந்திருந்தார் (யாத்திராகமம் 20 : 8 - 11).

தேவன் ஏழாம் நாளில் ஒய்வெடுத்தார் என்று இஸ்ரவேல் ஆதியாகமத்தில் கேட்டபோது, அவர்கள் ஆதியாகமக் கணக்கை தங்கள் சொந்த ஒய்வுநாள் ஆசரிப்பு மற்றும் பத்து கட்டளைகளுடன் தொடர்புபடுத்தாமல் இருக்க முடியவில்லை. இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் ஒய்வுநாளை ஒரளவு ஆசரித்திருந்தாலும், முழு அளவிலான ஒய்வுநாள் ஆராதனை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் மட்டுமே நடக்க முடியும் என்பதை உணர்வது முக்கியம். யாத்திராகமம் 20 : 8 - 11 இல் காணப்படுவது போல், இஸ்ரவேலர்கள் வாராந்திர ஒய்வுநாளை ஆசரிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் மற்ற புனித நாட்கள் அல்லது ஒய்வுநாட்களை ஆசரிக்க வேண்டியிருந்தது. உதாரணமாக, லேவியராகமம் 25 லிருந்து அவர்கள் ஒவ்வொரு ஏழாவது வருஷத்தையும் ஒரு ஒய்வு ஆண்டாக தங்கள் நிலத்தை தரிசு நிலமாக விட்டு ஆசரிக்க வேண்டியிருந்தது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். இஸ்ரவேல் ஒவ்வொரு ஐம்பதாவது வருடத்தையும் ஜூபிலி வருடமாக கொண்டாட வேண்டியிருந்தது. அப்பொழுது அனைத்து கடன்களும் மன்னிக்கப்பட்டு, அனைத்து குடும்பங்களும் தங்கள் சொந்த பரம்பரை நிலங்களுக்கு திரும்ப வேண்டும். மோசேயின் பிரமாணத்தில், இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் அலைந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

திரிந்த போது அவர்கள் ஆசரித்த எதையும் விட ஓய்வு தினத்தில் தேவனை அவர்கள் முழுதும் ஆராதித்த காரியம் மிகவும் சிக்கலானது. ஏனெனில் இஸ்ரவேல் கானான் தேசத்திற்குள் நுழையும் போதுதான் ஓய்வு நாளின் முழு அனுசரிப்பு நடைபெற முடியும், "ஓய்வு" அல்லது "ஓய்வெடுக்கும் இடம்" என பொருள் தரும் எபிரெய சொற்களான *நுவாச் nuach* (נוּחַ) அல்லது *மெனுக்கா menucha* (מְנוּחָה) ஆகியவற்றை கானான் தேசத்தை குறிப்பதற்கு மோசே பயன்படுத்தினார். இவை இரண்டும் பெரும்பாலும் *ஓய்வுநாளுடன்* (சப்பாத்துடன்) நெருங்கிய தொடர்புடையது. பல இடங்களில், மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தை இஸ்ரவேலின் ஓய்வு இடமாக விவரித்தார், அங்கு தேசம் தேவனுடைய நியாயப்பிரமாணம் சொல்கிறபடியான ஆராதனையை கடைசியாக செய்யும். உதாரணமாக, உபாகமம் 12 : 10 - 11 இல் இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில் குடியேறும்போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசிப்பீர்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசமபாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவர வேண்டும் (உபாகமம் 12 : 10 - 11).

ஓய்வுநாளின் முழு ஆசரிப்பு – அதாவது தேவனுடைய ஆராதனை – இஸ்ரவேல் ஓய்வு நிலத்திற்குள் நுழைந்த பின்னரே நடக்கும் என்பதை நாம் இந்தப் பகுதியில் பார்க்கிறோம். மோசேயைப் பொறுத்தவரை, ஓய்வுநாள் என்பது தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் அமைதியான ஆராதனைக்காக ஒரு நாளை ஒதுக்கி வைப்பதை விட மேலானதாகும். ஓய்வின் இடத்தில் வாசம் செய்தல் குறித்த மோசேயின் தரிசனம் மற்றும் தேவன் தனது நாமத்தை வைக்கும் விசேஷித்த இடத்தில் அவரை ஆராதிப்பது மற்றும் கொண்டாடுவது ஆகியவற்றின் மையப் பரிமாணமாகவும் ஓய்வுநாள் இருந்தது. இதனால்தான் சங்கீதம் 95 : 11 இல் கானான் தேசத்தில் இந்த வழியில் நுழைய தடை விதிக்கப்பட்டவர்களைப் பற்றி தேவன் பேசினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை" என்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் (சங்கீதம் 95 : 11).

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் ஒய்வுநாளுக்கும் தேவனின் முழு தேசிய ஆராதனைக்கும் இடையிலான இந்த நெருங்கிய தொடர்பு, தேவன் தனது ஒய்வுக்குள் நுழைந்ததோடு மோசே தனது சிருஷ்டிப்பின் கணக்கை ஏன் முடித்தார் என்பதை விளக்குகிறது. மோசே இஸ்ரவேலர்களுக்கு விளக்குகையில், தேவன் பூமியை குழப்பத்திலிருந்து ஒய்வுக்கு நகர்த்தியது போல், அவர் இஸ்ரவேலை எகிப்தின் குழப்பத்தில் இருந்து ஒய்வின் தேசத்தில் ஒய்வின் இலக்கை நோக்கி நகர்த்தினார். மோசே இஸ்ரவேலை ஒய்வின் இடமான கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார். மோசேயின் திட்டத்தை எதிர்த்தவர்கள் வெறுமனே ஒரு மனித திட்டத்தை எதிர்க்கவில்லை. பிரபஞ்சத்தின் சிறந்த கட்டமைப்புகளுக்கு ஏற்ப தனது மக்களை கொண்டுவருவதற்கான தேவனின் முயற்சிகளை அவர்கள் உண்மையில் எதிர்த்தனர். எகிப்தை விட்டு வெளியேறி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்திற்குள் நுழைவது தேவனின் சிருஷ்டிப்புக்கான பூரண திட்டத்துடன் ஒத்துப்போனது. சிருஷடிப்புக் கதையின் குழப்பமான தொடக்கமும் ஒய்வுநாளின் முடிவும் தேவன் மோசேயின் மூலம் இஸ்ரவேலுக்காக என்ன செய்கிறார் என்பதன் உண்மையான தன்மையை எப்படி விளக்கினார் என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், ஆதியாகமம் 1 : 3 - 31 இல் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் நாட்களின் நடுத்தரப் பகுதியின் சில கூறுகளை நாம் சுருக்கமாகப் பார்க்க வேண்டும். மோசே சிருஷ்டிப்பின் நாட்களை தனது ஊழியத்துடன் எவ்வாறு இணைத்தார்?

## ஒழுங்குபடுத்தலின் ஆறு நாட்கள்

சிருஷ்டிப்பின் நாட்களுக்கும் இஸ்ரவேல் எகிப்திலிருந்து வெளியேறியதிற்கும் இடையே பல தொடர்புகள் உள்ளன, ஆனால் இவற்றில் இரண்டை மட்டுமே நாம் பார்ப்போம்: முதலில், எகிப்திலிருந்து விடுதலையானதுடன் உள்ள இணைப்புகள், இரண்டாவதாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தை வைத்திருப்பதற்கான குறிக்கோள் ஆகியவற்றைப் பார்ப்போம்.

### எகிப்திலிருந்து விடுதலை

முதலில், ஆதியாகமம் 1 இல் சிருஷ்டிப்பை வரிசைப்படுத்தும்போது அவர் வெளிப்படுத்திய அதே வல்லமையை இஸ்ரவேலை எகிப்திலிருந்து விடுவிக்கும்போதும் தேவன் வெளிப்படுத்தினார். ஒரு பக்கத்தில், தேவன் எகிப்தியர்களுக்கு வாதைகளை அனுப்புவதன் மூலம் சிருஷ்டிப்பில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நிறுவப்பட்ட ஒழுங்கை மாற்றினார். உதாரணமாக, ஆரம்பத்தில் உயிரினங்கள் பெருகுவதற்கு நீர் உபயோகப்பட்டதுபோல அல்லாமல், தேவன் தண்ணீரை இரத்தமாக மாற்றியபோது எகிப்தின் நீர் கொடியதாக மாறி மற்றும் மீன்கள் இறந்தன. தேவன் ஆரம்பத்தில் கட்டளையிட்டபடி மனிதர்கள் உயிரினங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதாக இல்லாமல், தவளைகள், கொசுக்கள், பூச்சிகள் மற்றும் வெட்டுக்கிளிகள் எகிப்தியர்கள் மீது ஆளுகை செய்தன. சிருஷ்டிப்பில் ஒளியும் இருளும் பிரிந்திருந்தது. ஆனால் அது தலைகீழாக மாறி பகலில் கூட எகிப்து நிலத்தை இருள் சூழ்ந்தது. நிலம் தாவரங்களை உண்டுபண்ணாமல், ஆலங்கட்டி, நெருப்பு மற்றும் வெட்டுக்கிளிகள் எகிப்தில் உள்ள அனைத்து பயிர்களையும் அழித்தது. எகிப்திய ஜனங்களும் மிருகங்களும் பலுகி பெருகாமல், அதிக எண்ணிக்கையில் உயிர்சேதம் நிகழ்ந்தது. இந்த விதங்களிலும் மற்ற பல விதங்களிலும், எகிப்தின் மீதான சாபங்கள் ஆதியாகமம் 1 இன் ஆறு நாட்களில் தேவன் நிறுவிய ஒழுங்கை மாற்றியது. வாதைகளின் போது, எகிப்து தேசமானது உண்மையிலேயே பழமையான குழப்பத்தை நோக்கி நகர்ந்தது. மோசே இஸ்ரவேலை அந்த இடத்தை விட்டு வெளியேறும்படி அழைத்ததில் ஆச்சரியமில்லை, எகிப்தை ஒரு வடிவமற்ற, தரிசு நிலம் என்று அழைத்தார். எகிப்தில் வாழ்க்கை நன்றாக இருந்தது என்று சொல்கிற எந்த இஸ்ரவேலனும் மோசேயின் சிருஷ்டிப்பு விவரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எகிப்தில் அவர்களின் அனுபவம் எகிப்தியர்கள் தங்கள் நிலத்தைப் பற்றி நினைத்த விதத்திற்குமே முற்றிலும் மாறானதாக இருந்தது. இது தேவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட நிலம் என்று எகிப்தியர்கள் நம்பினர், வெளிப்படையாக குறைந்தபட்சம் சில இஸ்ரவேலர்களும் இதை நம்பினர். ஆனால் எகிப்து தேவனின் சீரமைந்த உலகிற்கு நேர்மாறாக மாறிவிட்டது என்று மோசே தெளிவுபடுத்தினார். எகிப்துடனான இந்த வேறுபாடு தெளிவானதாக இருந்தாலும், ஆறு நாட்கள் நிகழ்ந்த சிருஷ்டிப்பு எகிப்திலிருந்து விடுதலையடைதலுடன் நேர்மறையாக பொருந்தி இருந்தது. எகிப்தியர்கள் தங்கள் நிலம் பழமையான குழப்பத்தை நோக்கி நகர்வதைக் கண்டபோது, இஸ்ரவேலர்கள் தேவன் சிருஷ்டித்த ஆறு நாட்களை ஒத்த விதத்தில் உலகை தங்களுக்கு சாதகமாக ஒழுங்கு செய்வதைக் கண்டனர். அவர்களின் நீர் புதியதாகவும் உயிர்கொடுப்பதாகவும் இருந்தது. அவர்கள் தவளைகள் மற்றும் வெட்டுக்கிளிகளால் ஆக்கிரமிக்கப்படவில்லை. எகிப்தியர்கள் இருளில் தவித்தபோது அவர்கள் வெளிச்சத்தை அனுபவித்தனர். இஸ்ரவேலர்களின் நிலங்களில் விளைச்சல் இருந்தது. அவர்களின் விலங்குகள் பாதுகாக்கப்பட்டன, இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருந்தபோது பெருகினார்கள். இதை விட, வியக்கத்தக்க முறையில், சிருஷ்டிப்பின் மீதான தனது கட்டுப்பாட்டைக் காட்டினார், அதாவது செங்கடலைத் தடுத்து, அது சிருஷ்டிப்பின் மூன்றாம் நாளில் தோன்றியது போல வறண்ட நிலத்தை இஸ்ரவேலர்கள் முன் தோன்றச் செய்தார். இஸ்ரவேலின் சார்பாக தேவன் நிகழ்த்திய இயற்கை அதிசயங்கள் முன்நிகழ்ந்திராதவை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அல்ல. பல வழிகளில், ஆதியாகமம் 1 இன் நாட்களில் தேவன் உலகை ஒழுங்குபடுத்திய விதங்களை அவர்கள் நினைவு கூர்ந்தனர். ஆதியாகமம் 1 இல் தேவன் பூமியை ஒழுங்குபடுத்திய விதத்திற்கும், அவர் எகிப்திலிருந்து இஸ்ரவேலை விடுவித்த விதத்திற்கும் இடையேயான தொடர்புகள், ஜனங்களின் சார்பாக தேவன் செய்த வேலை அவரது சிருஷ்டிப்பு வேலைக்கு இணையாக இருந்தது என்பதை மோசேயின் வாசகர்களுக்கு நிரூபித்தன. எகிப்திலிருந்து அவர்கள் வெளியேறும்போது, தேவன் ஆரம்பத்தில் இருந்தபடியே உலகத்தை மறுவடிவமைத்தார். எகிப்திலிருந்து விடுதலையானது சிருஷ்டிப்பின் நாட்களை நினைவுபடுத்தியது மட்டுமல்லாமல், ஆரம்பத்தில் தேவன் நிறுவிய ஒழுங்கும் கானான் தேசத்தில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்தது.

## கானானை சுதந்தரித்தல்

இஸ்ரவேல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைந்தபோது, இயற்கையானது வளத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஒழுங்குபடுத்தப்படும். இதனால்தான் தேவன் கானானை பாலும் தேனும் ஓடுகிற பூமி என்று அழைத்தார். இது தவிர, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில், இஸ்ரவேலர்கள் முழுமையான தேவனுடைய சாயலை ஆறாவது நாளில் நிறுவப்பட்டதைப்போல பெற்றுக்கொள்வார்கள். விசேஷமாக ஆதியாகமம் 1 : 28 இல், தேவன் மனித இனத்திற்கு கூறியதை கவனியுங்கள்:

> நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதியாகமம் 1 : 28).

எகிப்தில் கூட, இந்த ஆசீர்வாதத்தில் சிலவற்றை இஸ்ரவேல் அனுபவித்திருந்தாலும், கானான் தேசத்தில்தான் தேவன் இஸ்ரவேலுக்கு இந்த கவுரவத்தை இன்னும் அதிக அளவில் வழங்குவார். மோசேயின் தலைமையின் கீழ், இஸ்ரவேலர்கள் சிருஷ்டிப்பில் இந்த சிறந்த நிலையை நிறைவேற்றும் இடத்திற்குச் சென்றனர். லேவியராகமம் 26 : 9 இல் இஸ்ரவேல் தேசத்தில் உள்ள விசுவாசமுள்ள இஸ்ரவேலர்களுக்கு தேவன் என்ன வாக்குத்தத்தம் அளித்தார் என்பதைக் கவனியுங்கள்:

> நான் உங்கள்மேல் கண்ணோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும்பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கையைத் திடப்படுத்துவேன் (லேவியராகமம் 26 : 9).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமம் 1 : 28 பற்றிய குறிப்பு இங்கே தெளிவாக உள்ளது. ஆதியாகமம் 1 : 28 இல் "நீங்கள் பலுகிப் பெருகுங்கள்" என்று தேவன் சொன்னார். உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன் என்று லேவியராகமம் 26 : 9 இல் தேவன் சொன்னார். கானான் தேசம் ஆரம்பத்தில் தேவன் ஒழுங்குபடுத்திய அற்புதமான உலகத்தைப் போல இருக்கும். தேவனுடைய சாயல் பூமியில் அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய இயற்கையான இணக்கமான இடமாக கானான் இருக்கும். மோசேயின் நாட்களில் இஸ்ரவேலின் அனுபவத்துக்கும் ஆறு நாட்களில் தேவன் சிருஷ்டித்ததற்கும் இடையிலான தொடர்பு சம்பந்தமாக சில வழிகளை மட்டுமே நாம் தொட்டிருக்கிறோம். ஆனால் முதல் ஆறு நாட்களில் தேவன் எப்படி பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்தினார் என்பது பற்றிய மோசேயின் பதிவு வெறுமனே காலத்தின் தொடக்கத்தில் என்ன நடந்தது என்பதற்கான அறிக்கை அல்ல என்பதை இந்த மாதிரியிலிருந்து நாம் பார்க்கிறோம். சிருஷ்டிப்பின் ஆறு நாட்களை அவர் தனது இஸ்ரவேல் வாசகர்கள் தங்கள் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை தெளிவாகப் பார்க்க உதவும் வகையில் விவரித்தார். தேவன் சில வழிகளில் இயற்கையைக் கட்டளையிடுவதன் மூலம் பிரபஞ்சத்தை குழப்பத்திலிருந்து ஒய்வை நோக்கி நகர்த்தியதைப் போலவே, அவர்களின் சார்பாக உலகத்தை ஒழுங்குபடுத்தி அவர் இஸ்ரவேலை எகிப்தின் குழப்பத்திலிருந்து கானானில் உள்ள ஒய்வுக்கு அழைத்துச் சென்றார். உலகின் சிருஷ்டிப்பு பற்றி மோசே சொல்வதை கேட்ட இஸ்ரவேலர்களின் எதிர்வினையை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். தங்களுக்கு நடப்பது தற்செயலானது அல்ல என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். எகிப்திலிருந்து அவர்களை மீட்டு கானானுக்கு அழைத்துச் செல்வதன் மூலம், தேவன் பிரபஞ்சத்திற்கு ஒரு சிறந்த ஒழுங்கைக் கொண்டுவர ஆரம்பத்தில் செய்ததைப் போலவே உலகில் செய்துகொண்டிருந்தார். இஸ்ரவேலின் இரட்சிப்பு ஒரு மறு சிருஷ்டிப்பு ஆகும், மேலும் அந்த மறு சிருஷ்டிப்பின் மகத்தான அனுபவங்களின் வழியாகச் செல்வதற்கு அவர்கள் மோசேயைப் பின்தொடர வேண்டியிருந்தது. இப்போது ஆதியாகமம் 1 : 1 - 2 : 3 இன் உண்மையான அர்த்தத்தை நாம் பார்த்திருக்கிறோம். சிருஷ்டிப்பின் நவீன பயன்பாடு என்கிற இறுதி தலைப்பை நாம் பார்க்க வேண்டும். இந்த வேத பகுதியைப் நம் பயன்பாட்டில் கொண்டுவருவதில், புதிய ஏற்பாடு இந்த வேத பகுதியின் கருப்பொருள்களை விரிவாக விவரித்த வழிகளை நாம் நெருக்கமாக பின்பற்றுவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நவீன பயன்பாடு

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தேவன் உலகை சிருஷ்டித்ததைப் பற்றிச் சொல்வதற்கு ஆதியாகமம் 1 யை பெரிதும் சார்ந்திருந்தார்கள். அவர்கள் மோசே கொடுத்த விவரங்களின் நம்பகத்தன்மையை நம்புகிறார்கள் என்பதற்கான ஒவ்வொரு குறிப்பையும் கொடுத்தனர். ஆயினும், இந்த உண்மை எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் மோசேயின் மைய நோக்கத்தை விரிவாக விவரித்தார்கள், நாம் அதை இந்த பாடத்தில் இங்கே சுருக்கப்படுத்தி காட்டியுள்ளோம். மோசே சிருஷ்டிப்பை எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் பெற்ற மீட்பின் முன்மாதிரியாகக் கண்டது போலவே, புதிய ஏற்பாடும் ஆதியாகமம் 1:1-2:3 யை மிகப் பெரிய மீட்பின் முன்மாதிரியாகப் பார்க்கிறது. அதாவது கிறிஸ்துவில் வரும் இரட்சிப்பின் முன்மாதிரியாகப் பார்க்கிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில் இஸ்ரவேல் கண்ட இரட்சிப்பு மற்றும் நியாயத்தீர்ப்பின் அனுபவங்கள் அனைத்தும் தேவன் தனது குமாரன் இயேசு மூலம் இரட்சிப்பையும் நியாயத்தீர்ப்பையும் கொண்டுவரும் பெரிய மற்றும் கடைசி நாளை எதிர்பார்த்ததாக புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. இந்த நம்பிக்கை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களை மோசேயின் சிருஷ்டிப்பு பற்றிய விவரத்தை கிறிஸ்துவின் மீது விசேஷித்த கவனத்துடன் அணுக வழிநடத்தியது. சிருஷ்டிப்பின் வெளிச்சத்தில் இஸ்ரவேல் தனது சொந்த வெளியேற்றத்தைக் கண்டது போல, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சிருஷ்டிப்பின் வெளிச்சத்தில் கிறிஸ்துவைப் பார்த்தனர். கிறிஸ்துவின் மீட்புப் பணி பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையை நாம் ஆராயும்போதெல்லாம், கிறிஸ்து உலகத்திற்கு ஒரே நேரத்தில் மீட்பைக் கொண்டுவரவில்லை என்று புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் உணர்ந்தார்கள் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதற்கு பதிலாக, கிறிஸ்து தனது ராஜ்யத்தின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மூன்று நிலைகளில் உலகிற்கு பெரும் இரட்சிப்பையும் நியாயத்தீர்ப்பையும் கொண்டுவந்தார் என்று அவர்கள் நம்பினர். முதலில், கிறிஸ்து பூமிக்கு வந்தபோது தனது ஜனங்களின் இரட்சிப்பிற்காக நிறைய சாதித்தார். ராஜ்யத்தின் துவக்கம் என்று கிறிஸ்துவின் முதலாம் வருகையின் இந்த காலத்தை நாம் அழைக்கலாம். புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல், அத்துடன் பெந்தெகொஸ்தே மற்றும் அப்போஸ்தலர்களின் அடித்தள ஊழியங்கள் ஆகியவற்றை கிறிஸ்துவின் மாபெரும் மீட்பின் தொடக்கமாகப் பார்க்கிறது. இரண்டாவது இடத்தில், அவர் இந்த பூமியை விட்டு சென்ற பிறகு, கிறிஸ்துவின் ராஜ்யம் தொடர்கிறது என்று புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு புரிந்திருந்தது. இந்த நேரத்தில், தேவனின் இரட்சிக்கிற கிருபை நற்செய்தியைப் பிரசங்கிப்பதன் மூலம் உலகம் முழுவதும் பரவுகிறது. சபையின் முழு வரலாறு அப்போஸ்தலர்களுக்குப் பிறகும் கிறிஸ்து மீண்டும் வரும் வரையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்துவில் உள்ள இரட்சிப்பின் தொடர்ச்சியைக் உள்ளடக்கியுள்ளது. மூன்றாம் இடத்தில், கிறிஸ்து மகிமையில் திரும்பி வரும்போது, ராஜ்யத்தின் நிறைவில் இரட்சிப்பு முழுமையாக வரும் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. துன்மார்க்கத்தின் மீதான அவரது வெற்றியை நாம் பார்ப்போம், கிறிஸ்துவில் மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள், அவருடன் உலகம் முழுவதின் மீதும் நாம் ஆட்சி செய்வோம். கிறிஸ்துவின் முதல் வருகையில் தொடங்கிய இரட்சிப்பு இன்றும் தொடர்கிறது, அவர் இறுதியில் வரும்போது நிறைவடையும். மோசே எழுதிய சிருஷ்டிப்பைப் பற்றி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் விரிவாக விவரித்த விதங்களைப் புரிந்துகொள்ள கிறிஸ்துவின் ராஜ்யத்தின் இந்த மூன்று நிலைகளும் மிகவும் அவசியமாகும். அவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பார்க்க வேண்டும். மோசே இஸ்ரவேலுக்கு எழுதிய முன்மாதிரியைப் பின்பற்றி, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவில் கிறிஸ்துவின் இரட்சிப்புக்கு ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பு விவரத்தை கருத்தூன்றினர். புதிய ஏற்பாடு ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தை ராஜ்யத்தின் தொடக்கத்துடன் தொடர்புபடுத்தும் வழிகளைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## தொடக்கம்

கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கத்தை வியாக்கியானம் செய்வதற்கு புதிய ஏற்பாடு எவ்வாறு சிருஷ்டிப்பை கண்ணாடி வில்லையாகப் பயன்படுத்துகிறது? பல சந்தர்ப்பங்களில், புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் முதல் வருகையை தேவனின் மறு சிருஷ்டிப்பாகவும், பிரபஞ்சத்தின் மறுவடிவமைப்பாகவும் பேசுகிறது. யோவான் சுவிசேஷத்தின் தொடக்க வார்த்தைகளை முதலில் கவனியுங்கள். யோவான் 1 : 1 இல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவான் 1 :1 - 3).

யோவான் சுவிசேஷம் "ஆதியிலே" என்று தொடங்குவதைக் கவனியுங்கள். இந்த வார்த்தைகள் ஆதியாகமம் 1: 1 இன் ஆரம்ப வார்த்தைகளிலிருந்து வந்தவை என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். அங்கே மோசே இவ்வாறு கூறினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1 : 1).

ஆரம்பத்திலிருந்தே, யோவான் தனது வாசகர்களை ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் விவரம் பற்றிய கட்டமைப்பில் வைத்தார். பின்னர் யோவான், எல்லாவற்றையும் சிருஷ்டித்த திரித்துவத்தின் நபர் கிறிஸ்து என்று கூறினார்; அவர் தேவனின் வார்த்தையாகவும் சிருஷ்டிப்பில் பேசியவராகவும் இருந்தார், அவரால் தான் உலகம் முதலில் உருவாக்கப்பட்டது. இந்த வசனங்கள் சிருஷ்டிப்பின் கதை பற்றிய தெளிவான குறிப்புடன் தொடங்கினாலும், நாம் யோவான் 1 இல் தொடர்ந்து படிக்கும்போது, அவர் ஆதியாகமத்தில் இருக்கிற சிருஷ்டிப்பு பற்றிய விவரத்திலிருந்து அதற்கு இணையான மற்ற நிகழ்வுகளுக்கு நுட்பமாக மாறியதைக் காண்கிறோம். யோவான் 1 : 4 - 5 இல் அடுத்து வரும் வசனங்களில் அவர் எழுதியதை கவனியுங்கள்:

> அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை (யோவான் 1 : 4 - 5).

இந்த கட்டத்தில் யோவான் ஆதியாகமம் 1 இன் கருப்பொருள்களை தொடர்ந்து குறிப்பிட்டார், குறிப்பாக தேவன் முதல் நாளில் இருண்ட குழப்பமான உலகத்திற்கு கொண்டு வந்த *ஒளியின்* கருப்பொருளை குறிப்பிட்டார். ஆயினும், இயேசுவை ஆதியாகமத்தின் வெளிச்சம் என்று வெறுமனே பேசுவதற்குப் பதிலாக, பாவத்தின் காரணமாக உலகத்தில் உண்டான இருளில் ஒளிரும் ஒளியாக கிறிஸ்துவின் அவதாரத்தை யோவான் சுட்டிக்காட்டினார். சிருஷ்டிப்பில் இருந்து கிறிஸ்துவின் வருகைக்கு மாறுவதன் மூலம், உலகின் பாவமான இருளுக்கு எதிராக கிறிஸ்துவின் பிரகாசத்தில், தேவன் ஆரம்பத்தில் செய்ததைப் போலவே, உலகின் குழப்பங்களுக்கு எதிராக செயல்பட்டார் என்பதை யோவான் வெளிப்படுத்தினார். 2 கொரிந்தியர் 4 : 6 இல் இதே போன்ற ஒரு அம்சம் இருக்கிறது. அங்கு பவுல் தனது ஊழியத்தின் மகிமையை இவ்வாறு விளக்கினார்:

> இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் (2 கொரிந்தியர் 4 : 6).

இங்கே பவுல் "தேவன் … 'இருளிலிருந்து வெளிச்சம் பிரகாசிக்கடவது'" என்று ஆதியாகமம் 1 ஐ நேரடியாகக் குறிப்பிட்டார், " அவர் முதலில் ஒளியின் தோற்றத்துடன் சிருஷ்டிப்பின் அசல் வரிசையில் கவனம் செலுத்தினார்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் பின்னர் சிருஷ்டிப்பின் கதைக்கு இணையான ஒரு முக்கியமான ஒன்றின் மீது கவனத்தை ஈர்த்தார். – அதாவது ”தேவனின் மகிமை” ”கிறிஸ்துவின் முகத்தில்” காணப்பட்டபோது தேவன் ”நம் இருதயங்களில் தனது ஒளியை பிரகாசிக்கச் செய்தார்”. கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கமானது –அதாவது கிறிஸ்துவின் முகம் பூமியில் காணப்பட்ட நேரம் – தேவனின் அசல் சிருஷ்டிப்பு வேலையின் முன்மாதிரியுடன் தொடர்புடையது என அப்போஸ்தலன் கூறினார். ஆரம்பத்தில் ஒளியின் தோற்றத்தில் தேவன் காட்டிய அதே மகிமை கிறிஸ்துவின் முதல் வருகையில் இருளடைந்த உலகிலும் வெளிப்பட்டது. இந்த இரண்டு வேத பகுதிகளிலிருந்தும் மோசேயின் சிருஷ்டிப்பு விவரத்திற்கான கிறிஸ்தவ அணுகுமுறையில் இன்றியமையாத ஒரு அம்சத்தைக் காண்கிறோம். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் முதல் வருகையில், அதாவது ராஜ்யத்தின் துவக்கத்தில் தேவன் என்ன செய்தார் என்பதற்கான ஒரு உருவப்படத்தையும் ஒரு எதிர்பார்ப்பையும் ஆதியாகமம் 1 இல் பார்க்கிறார்கள்.

பல வழிகளில், நீங்களும் நானும் மோசேயைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் சந்தித்த சோதனையை எதிர்கொள்கிறோம். முதன்முதலில் தேவன் இஸ்ரவேலை எகிப்திலிருந்து விடுவித்த போது செய்ததை போலவே, கிறிஸ்து முதன்முதலில் இந்த உலகத்திற்கு வந்தபோது தேவன் அற்புதமான ஒன்றைச் செய்தார். இருப்பினும், 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவில் தேவன் செய்த வேலை உண்மையில் எவ்வளவு அற்புதமானது என்பதை நாம் அடிக்கடி பார்க்கத் தவறிவிடுகிறோம். ஒரு அறியப்படாத மனித நோக்கத்திலிருந்து, கிறிஸ்துவின் வாழ்க்கை மிகவும் முக்கியமானதாகத் தெரியாது. அந்த காலங்களில் நடந்த பல முக்கியமற்ற நிகழ்வுகளில் ஒன்றாக இது எளிதில் புறக்கணிக்கப்படலாம். கிறிஸ்துவைப் பற்றி நாம் இந்த வகையில் சிந்திக்கத் தூண்டப்படும்போது, புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பூமியில் கிறிஸ்துவின் தோற்றம் தேவன் இவ்வுலகில் செய்கிற இறுதி மறு ஒழுங்குமுறையின் தொடக்கமாகும். பாவம் மற்றும் மரணத்தின் குழப்பமான இருளிலிருந்து தேவன் உலகை விடுவித்துக்கொண்டிருந்தார். தேவன் தனது சிருஷ்டியை ஒரு அற்புதமான, நித்திய ஜீவனளிக்கும் இடமாக தனக்காக மாற்றவும், அவருடைய சாயல் என்றென்றும் மகிமையில் தங்கவும் செய்யும் செயல்முறை இயேசுவின் முதல் வருகை துவங்கியது. நாம் கிறிஸ்துவில் மட்டுமே விசுவாசம் வைப்பது சரியானது. இதுவரை, புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் முதல் வருகையின் முக்கியத்துவத்தை விளக்க சிருஷ்டிப்பின் கதையைப் பயன்படுத்துகிறது என்று பார்த்தோம். இப்போது புதிய ஏற்பாடு ராஜ்யத்தின் தொடர்ச்சியை, கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாவது வருகைகளுக்கு இடையிலான காலமாக கணக்கில் கொள்கிறது என்றும் இது ஒரு மறு சிருஷ்டிப்பு என்றும் கருதுவதை நாம் காணலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தொடர்ச்சி

இந்த கண்ணோட்டத்தை விளக்கும் நமக்குத் தெரிந்த ஒரு வேத பகுதி 2 கொரிந்தியர் 5 : 17:

> இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின! (2 கொரிந்தியர் 5 : 17)

ஒரு நபர் கிறிஸ்துவில் இருக்கும்போது அவர் ”ஒரு புதிய சிருஷ்டி” ஆகிறார் என்று கிங் ஜேம்ஸ் பதிப்பு இந்த வசனத்தை மொழிபெயர்க்கிறது. இந்த மொழிபெயர்ப்பு துரதிருஷ்டவசமானது, ஏனெனில் ஆதியாகமம் 1 இன் சிருஷ்டிப்பு விவரத்தை பவுல் மறைமுகமாக குறிப்பதைத் தெரிவிக்கத் தவறிவிட்டது. கிரேக்க வார்த்தை *க்டிசிஸ்* (κτίσις) ஆகும், இது ”சிருஷ்டிப்பு” (பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகளைப் போல) என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ”சிருஷ்டி” என்பது சரியான அர்த்தம் அல்ல. உண்மையில், வேத பகுதியின் இந்த பகுதி ”ஒரு புதிய சிருஷ்டிப்பு” என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். மக்கள் இரட்சிக்கிற விசுவாசத்துடன் கிறிஸ்துவிடம் வரும்போது, அவர்கள் ஒரு புதிய இடம் அல்லது உலகத்தின் உறுப்பினராகவும், புதிய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாகவும் மாறுகிறார்கள் என்பது பவுலின் கருத்தாக இருக்கிறது. இந்த வெளிச்சத்தில், ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் போது புதிய சிருஷ்டிப்பை அனுபவிக்கிறார்கள். இந்த அர்த்தத்தில், சிருஷ்டிப்பைக் குறித்த ஆதியாகமத்தில் உள்ள விவரம், கிறிஸ்துவைக் கேட்கும், விசுவாசிக்கும் மற்றும் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் என்ன நடக்கிறது என்பதை சரியாகப் புரிந்துகொள்ளும் ஒரு வழியாகிறது. தேவனின் புதிய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாக நாம் மாறும்போது, உலகத்திற்கான தேவனின் சிறந்த ஒழுங்கின் அற்புதத்தை நாம் அனுபவிக்கத் தொடங்குகிறோம். இந்தக் காரணத்திற்காக, மோசேயின் சிருஷ்டிப்பு விவரத்தின் மீது ஈர்க்கப்பட்ட மற்றொரு வழியில் பவுல் ஒரு தனிநபருடைய இரட்சிப்பின் செயல்முறையை விவரித்ததில் ஆச்சரியமில்லை. கொலோசெயர் 3 : 9 - 10 இல் நாம் இந்த வார்த்தைகளைப் வாசிக்கிறோம்:

> பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே (கொலோசெயர் 3 : 9 - 10).

இந்த வேத பகுதியில், அப்போஸ்தலன் ஆதியாகமம் 1 இன் அடிப்படையில் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு என்ன நடக்கிறது என்பதை விவரித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

[நம்முடைய] ”சிருஷ்டிகரின் சாயலுக்கொப்பாய் நாம் புதிதாக்கப்படுகிறோம்.” நிச்சயமாக, பவுல் ஆதியாகமம் 1 : 27 யைக் குறிப்பிட்டார், அங்கு தேவனின் சீரமைந்த உலகம் ”தேவனின் சாயலில்” உருவாக்கப்பட்ட ஆதாமையும் ஏவாளையும் உள்ளடக்கியிருப்பதாக மோசே கூறினார். கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது, நம் முதல் பெற்றோர்கள் கொண்டிருந்த அதே தேவ சாயலை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக வாழ்நாள் முழுவதும் நாம் தொடர்ந்து ”புதுப்பிக்கப்படுவதை” காண்கிறோம். ராஜ்யத்தின் தொடக்கத்தில் மட்டுமல்ல, அதன் தொடர்ச்சியிலும் கிறிஸ்துவின் வேலையைப் புரிந்துகொள்வதற்கான ஒரு தரநிலையாக புதிய ஏற்பாடு மோசேயின் சிருஷ்டிப்பு விவரத்தை பயன்படுத்தியது என்பதை இந்த இரண்டு வேதபகுதிகளும் விளக்குகின்றன. நிச்சயமாக, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மோசேயின் சிருஷ்டிப்புக் கதையின் கருப்பொருளை ஒரு இறுதி கட்டத்திற்கு எடுத்துச் சென்றனர். ஒரு புதிய சிருஷ்டிப்பின் தொடக்கமாக அவர்கள் கிறிஸ்துவின் முதல் வருகையையும் தனிநபர்கள் தங்கள் வாழ்க்கையில் புதிய சிருஷ்டிப்பின் விளைவுகளை அனுபவிக்கும் நேரமாக ராஜ்யத்தின் தொடர்ச்சியையையும் பார்த்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிருஷ்டிப்பின் கருப்பொருள்களை கிறிஸ்துவின் பணியின் இறுதி கட்டமாகிய ராஜ்யத்தின் நிறைவிலும் கருத்தூன்றினர்.

## ராஜ்யத்தின் நிறைவு

புதிய ஏற்பாட்டில் குறைந்தது இரண்டு வேத பகுதிகள் இந்த விஷயத்தில் தனித்து நிற்கின்றன. முதலாவதாக, மோசேயின் சிருஷ்டிப்பு பற்றிய விவரத்தின் அடிப்படையில் கிறிஸ்துவின் வருகையை எபிரெயர் 4 குறிக்கிறது:

> மேலும், ”தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்” என்று, ஏழாம்நாளைக்குறித்து ஒரிடத்தில் சொல்லியிருக்கிறார்... தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது; ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஒய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஒய்ந்திருப்பான். ஆகையால், நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் (எபிரெயர் 4 : 4 - 11).

மோசே ஆதியாகமம் 2 இல் தேவனின் ஒய்வுநாளை இஸ்ரவேல் ஒய்வு நிலமாகிய கானானை நோக்கிச் செல்ல தூண்டுகோலாக உபயோகித்தது போல, எபிரெய எழுத்தாளர் தேவனின் ஒய்வுநாளை கிறிஸ்து மீண்டும் வரும் போது நாம் அனுபவிக்கப் போகும் இறுதி மீட்பின் சிறந்த முன்மாதிரியாகக் கண்டார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் ஆரம்பத்தில் உலகை ஒழுங்குபடுத்தி ஒய்வுநாளின் மகிழ்ச்சியைக் கொண்டுவந்த அதே வழியில், கிறிஸ்து மகிமையில் மீண்டும் வரும்போது உலகை மீண்டும் மறு ஒழுங்குபடுத்தி தனது ஜனங்களுக்கு இறுதி ஒய்வுநாளின் மகிழ்ச்சியைக் கொடுப்பார். இந்த நாளுக்காக நாம் ஏங்கும்போது, *கிறிஸ்து திரும்பி வரும்போது வரும் "அந்த ஒய்வுக்குள் நுழைய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்"* என்று இங்கே கூறப்பட்டுள்ளது. இறுதியாக, மோசேயின் சிருஷ்டிப்பு விவரத்தின் அடிப்படையில் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையை அடையாளம் காட்டும் மிக அற்புதமான வேத பகுதிகளில் ஒன்று வெளிப்படுத்தின விசேஷம் 21 : 1 ஆகும். கிறிஸ்துவின் வருகைக்கு யோவான் சிருஷ்டிப்பின் கருப்பொருள்களைப் கருத்தூன்றிய விதத்தைக் கவனியுங்கள்:

> பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று (வெளிப்படுத்தின விசேஷம் 21 : 1).

யோவான் "ஒரு புதிய வானம் மற்றும் ஒரு புதிய பூமி" பற்றி பேசினார், மேலும் இந்த சொற்றொடர் தேவன் "வானத்தையும் பூமியையும்" சிருஷ்டித்தார் என்று பதிவு செய்கிற ஆதியாகமம் 1 : 1 யை நினைவுபடுத்துகிறது. மேலும், இந்த புதிய உலகில் *"இனி கடல் இருக்காது"* என்று யோவான் கூறினார். ஆதியாகமம் 1 : 9 இல் தேவன் கடலைத் தடுத்து, வரம்புகளுக்குள் வைத்து, உலர்ந்த நிலம் தோன்றச் செய்து மனித இனத்திற்கு பாதுகாப்பான வாழ்விடமாக அமைத்தது *உங்களுக்கு நினைவிருக்கலாம்.* கிறிஸ்துவின் வருகைக்குப் பிறகு, உப்பு கடல்கள் பூமியிலிருந்து முழுவதுமாக அகற்றப்பட்டு புதிய ஜீவன் தரும் நீர் புதிய உலகில் இருப்பதைக் காணலாம். கிறிஸ்துவின் வேலை ஆதியாகமம் 1 இல் உள்ள சிருஷ்டிப்பின் நாட்களைப் போன்றது, ஆனால் கிறிஸ்துவில் தேவன் இதைவிட சிறந்த ஒழுங்கை கொண்டு வருவார். முழு பிரபஞ்சமும் புதிய வானம் மற்றும் புதிய பூமியாக மீண்டும் உருவாக்கப்படும், மேலும் தேவனும் அவருடைய ஜனங்களும் சேர்ந்து அந்த புதிய உலகத்தை அனுபவிப்பார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் சிருஷ்டிப்பிலிருந்து தங்கள் நித்திய நம்பிக்கையைத் துண்டிக்கிறார்கள். நாம் பரலோகத்தில் ஆவிக்குரிய உலகில் நித்தியத்தை செலவிடுவோம் என்று கருதுகிறோம். ஆனால் புதிய ஏற்பாடு இதைப் பற்றி மிகவும் தெளிவாக இருக்கிறது. சிருஷ்டிப்பின் ஏழாம் நாளில் நியமிக்கப்பட்ட ஒய்வுநாளுக்கு திரும்புவதே நம் இறுதியான இலக்காகும். புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நாம் நித்தியத்தை செலவிடுவோம். இது மோசேயின் காலத்தில் இஸ்ரவேலின் நம்பிக்கையாக இருந்தது, இன்றும் அது நம் நம்பிக்கையாகும். புதிய ஏற்பாட்டின் வழிகாட்டுதலை நாம் பின்பற்றுகையில், ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரத்தை நாம் நீண்ட காலத்திற்கு முன்பு என்ன நடந்தது என்பதற்கான ஒரு பதிவைப் போல மட்டும் எண்ணாமல் அதற்கும் மேலானதாக அதை அணுக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டும். கிறிஸ்துவின் முதல் வருகையில் தேவன் என்ன செய்தார் என்பதற்கும் தினமும் நம் வாழ்வில் அவர் இப்போது என்ன செய்கிறார் என்பதற்கும் கிறிஸ்து திரும்பி வரும்போது தேவன் எதை ஒருநாள் நிறைவடையச் செய்வார் என்பதற்குமான ஒரு உருவப்படம் இதுவாகும்.

கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளிலும், தேவன் உலகிலும் நம் வாழ்விலும் பாவம் மற்றும் மரணத்தின் குழப்பத்திற்கு எதிராக செயல்படுகிறார். ராஜ்யத்தின் துவக்கத்திலும், தொடர்ச்சியிலும், நிறைவிலும், அவர் உலகை அதன் சீரமைந்த முடிவின் பாதையில் அமைக்கிறார் – அதாவது இது அவருடைய ஜனங்களுக்கு அவர் உருவாக்கும் ஒரு அற்புதமான புதிய சிருஷ்டிப்பைக் குறிக்கிறது.

# முடிவுரை

இந்த பாடத்தில் ஆதியாகமம் 1 – 11 இன் முக்கிய நோக்கம், ஆதியாகமம் 1 : 1 - 2 : 3 இன் கட்டமைப்பு மற்றும் அசல் அர்த்தம், மற்றும் புதிய ஏற்பாடு கிறிஸ்துவுக்கும் நம் வாழ்க்கைக்கும் சிருஷ்டிப்பு விவரத்தின் கருப்பொருள்களை கருத்தூன்றின வழிகள் ஆகிய நான்கு முக்கிய யோசனைகளை நாம் கண்டோம். குறைந்தபட்சம் சொன்னால், மோசேயின் சிருஷ்டிப்பு பற்றிய பதிவிற்கான இந்த அணுகுமுறையின் இன்றைக்கான தாக்கங்கள் ஆச்சரியமாக இருக்கின்றன.

இன்று வாழும் கிறிஸ்தவர்களாக, ஆதியாகமத்தில் மோசேயின் அசல் நோக்கம் எவ்வாறு கிறிஸ்துவில் நம் வாழ்க்கைக்குப் பொருந்துகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களை முதலில் கேட்ட இஸ்ரவேலர்களைப் போலவே, இந்தப் பாவமான உலகில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால், நாம் எளிதில் உற்சாகமிழந்து போகிறோம். ஆனால் மோசே தனது வாசகர்களை தேவன் தனது சீரான உலகத்தை நோக்கி கொண்டு செல்கிறார் என்று நம்புவதற்கு ஊக்குவித்தது போல, கிறிஸ்துவில் இந்த சீரான உலகை நோக்கி தேவனின் அற்புதமான பாதையில் நடக்கும்போது நாமும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.